முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து நடத்திய மாபெரும் கால்பந்தாட்ட போட்டி ராயப்பேட்டை நியூ காலேஜ் மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அருகில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, மாநில துணை செயலாளர்கள் பொன் சிகாமணி, எஸ். ஆர். பார்த்திபன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், த.வேலு, எழிலன், மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, சேப்பாக்கம் பகுதி செயலாளர் மதன்மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உணவு தானிய உற்பத்தியில் மகத்தான சாதனை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !... முதல் பக்கத் தொடர்ச்சி

பொருட்கள் மக்களுக்கு உரிய விலையில் கிடைக்க வேண்டும். ஏற்று மதி பெருக வேண்டும். இத்தகைய வேளாண் புரட்சியை நாம் நடத்தி வருகிறோம். அதற்காக எத்தனையோ திட்டங்களை நாம் தீட்டித் தந்திருக்கிறோம். இன்னும் பல திட்டங்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம்.

நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகம்!

வேளாண்மையில், நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும். இரண்டு ஆண்டுகளாக நல்ல மழை பெய்து வருகிறது. தண்ணீர் பிரச்சினை இல்லை. வேளாண் பணியாளர்கள் கிடைக்கிறார்கள். இவை அனைத்தையும் உழவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பருவ நிலை மாற்றம் மற்றும் உணவுத் தேவை அதிகரிப்பு ஆகிய இரண்டையும் சமாளிக்கும் வகையில் நம்முடைய வேளாண் முயற்சிகள் அமைய வேண்டும்.

துல்லியமான வேளாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஸ்மார்ட் போனைப் பயன்படுத்திப் பயிர் பாசன முறையைக் கண்காணித்தல், ஆளில்லா விமானங்களை பயன்படுத்துதல் ஆகியவை எல்லாம் இப்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

வேளாண் துறையில் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும் போது, உழவர்களுக்கு தொழில் நுட்பம் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேளாண்மை தெரிந்திருக்க வேண்டும். இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டால், வேளாண்மை என்பது வர்த்தகத் தொழிலாக மாறும். அதற்கு இது போன்ற கண்காட்சிகள் அடித்தளம் அமைக்கும். இது போன்ற கண்காட்சிகளை தொடர்ந்து நடத்துங்கள். வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் இது போன்ற கண்காட்சிகளால் விளை பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டும் கால மெல்லாம் இருந்துவிடக் கூடாது. அவர்களே விற்பனை யாளர்களாக மாற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன்தான் உழவர் சந்தைகளை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அமைத்துக் கொடுத்தார்கள். இடைத்தரகர்கள் இல்லாமல் வேளாண் பொருட்களை உழவர்கள் விற்பனை செய்து பயன்பெற்றார்கள்.

உழவர்களின் நலன் போற்றும் அரசு!

இப்படி, வேளாண் பெருங்குடி மக்களின் நலன் போற்றும் அரசாக நம்முடைய அரசு இருந்து வருகிறது. ஆனால் உழவர்களுக்கு எதிராக 3 வேளாண் சட்டங்களை கொண்டு வந்து அவர்களை மாதக் கணக்கில் தகிக்கும் வெயிலிலும், நடுங்கும் குளிரிலும், தலைநகரில் போராட வைத்தது ஒன்றிய பாஜக அரசு. பல நூறு பேர் உயிரிழந்த பின்னும், அவர்களின் உறுதியை குறையாத கண்ட பின்னர்தான், அவர்கள் பின் வாங்கினார்கள். இதுதான் உழவர் விரோத ஒன்றிய பாஜக அரசு. ஆனால், திமுக அரசு எப்பொழுதும் உழவர்களின் நண்பனாக இருக்கும்.

இலவச மின் இணைப்பு வழங்கி சாதனை!

அதனால்தான் 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும், ஒரே கையெழுத்தில், 7000 கோடி ரூபாய் வேளாண் கடன்களை தள்ளுபடி செய்தார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நடக்கும் நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்த ஒன்றரை ஆண்டுகளில், நமது அரசும் ஒன்றரை இலட்சித்திற்கும் அதிகமான இலவச மின் இணைப்புக்களை உழவர்களுக்கு வழங்கி வரலாற்று சாதனை படைத்திருக்கிறது.

இவையெல்லாம் வேளாண் பெருங்குடி மக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இந்த மண்ணையும், மக்களையும் காப்பதற்கான கடமை அவர்களுக்குக் காத்திருக்கிறது. அதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

வேளாண் அறிவு என்பது உழவர்கள் மட்டுமல்ல, அனைத்து மக்களும் பெற்றாக வேண்டும்.

மண்ணைக் காப்போம்.

மக்களைக் காப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி சி.பி.திருமலை முன்னிலை!

அண்ணாநகர் 101 வது வட்ட தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

நே.சிற்றரசு தயாநிதி மாறன் எம்.கே.மோகன் ச.பரமசிவம் கார்த்திக் மோகன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை. 9

அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டக் கழக தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (9.7.2023 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 11.30 மணிக்கு, அண்ணாநகர் கிழக்கு, திருவள்ளுவர் நகரில் வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, சி.பி.திருமலை, வி.இராஜேந்திரன், ஜெ.வீரமணி, டி.தயாளரங்கன், டி.சம்மந்தா, ஆர்.ஜி.ராகவநாயகம், எம்.பாலசந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ். முரளிகிருஷ்ணன், ஐ.சி. எப்.பி.வேலாயுதம், ஜெ.மகேஸ்வரி, டி.ஜெ.முருகன், ஆர்.புருஷோத்தமன், டி.ராஜு, வி.கண்ணன், எம்.குணசேகரன், கே.செந்தில், வி.ஆர். சதீஷ்குமார், பி.குப்புசாமி, என்.மகேஷ், கே.தினேஷ்குமார், ஏ.அசோக்குமார், இ.கல்பனா, என்.எஸ்.சரவணன், எம்.கோவிந்தசாமி, பொன். கண்ணபிரான், பரிமளா அசோகன், கீதா சிகாமணி, என்.முரளி, சிவகாமி செல்வராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், எஸ்.சேரன், ஏ.டி. முருகன், கராத்தே என். ஆனந்த், ராணி ரவிச்சந்திரன் எம்.சி. ஆகியோர் அறுசுவை உணவினை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெய்சங்கர், அருள் கண்ணன், வசந்தி பரமசிவம் எம்.சி, புஷ்பலதா ஜெய்சங்கர் எம்.சி, பா.பிரபு, வி.சாய்செல்வம், கே.பி.சுரேந்தர், மரியா பிரான்ஸிஸ், இரா.இளங்கோவன் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயல்வீரர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

101 வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.பாஸ்கர் நன்றி கூறுகிறார்.

காரம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்

சா.அன்பழகன் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி!

ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 9

சென்னை தெற்கு மாவட்டம், காரம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் காரம்பாக்கம் சா.அன்பழகனின் 13 ஆம் நாள் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (9.7.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, அன்பழகன் இல்லம், வ.ஊ.சி. தெரு, காரம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தலைமை வகிக்கிறார். இரா. சீனிவாசன், இ.ஜெயவேல், இரா.ரமேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஹேமலதா கணபதி எம்.சி, சி.சுந்தர், மு.ஆறுமுகம், ச.ரவி, க.கைலாசம், இ.பார்த்திபன், இரா.ராஜேந்திரன், மா.பா.சித்ராலயம், ஸ்ரீ.கு.சேகரன், நா.துரை, ஆ.பழனி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி படத்தினை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் வளசரவாக்கம் 11 மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர், 146 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம், மாநில விவசாய அணி இணை செயலாளர் எஸ்.அப்துல்காதர், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர், 154 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வ.செல்வகுமார், ஆர்.என். துரை, பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், எஸ்.பாரதி, கே.ராஜி, எஸ்.பாலமுருகன், ச.சங்கர்கணேஷ் எம்.சி, எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ. மோசஸ், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆ. செல்வம், சாந்திஇராமலிங்கம் எம்.சி, செல்விரமேஷ் எம்.சி, இராமாபுரம் வி.ராஜேஷ், நா.அப்துல்கபூர், ஜெ.ஏ.துரை, வே.ஸ்டாலின், எம்.கே.கமலக் கண்ணன், கோ.இராமலிங்கம், எம்.எல்.நாதன், மூன்லைட் டி.ரவி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் எல்.அருள், ஆர்.எஸ்.தில்லைவாணன், லதாரவிச்சந்திரன், கே.ராமதாஸ், வி. ஜெகன்நாதன், மெட்ரோ நகர் ஜி.சீனிவாசன், எஸ்.பி.ஜி.பிரபு மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.

சா. ஆனந்தன், சென்னை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அ.ராகேஷ், அன்பழகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் தலைமையில்!

சென்னை, ஜூலை 9-

சென்னை தென்மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம் இன்று (9.7.2023) மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் ஜெ. எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் தலைமையில் இன்று (9.7.2023) காலை 11.00 மணியளவில் நம்பர்.1, விநாயகம் தெரு, மேற்கு மாம்பலம் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

பொருள்: தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இதில் மாவட்ட அணியின் தலைவர், துணைத் தலைவர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்ட அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் கேட்டுக்கொள்கின்றார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி துணைச் செயலாளர்

சாந்தி பங்காரு புதுமனை புகுவிழா - அலுவலகம் திறப்பு விழா!

மயிலை த.வேலு - ஜெ.கருணாநிதி - ராஜா அன்பழகன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 9-

தியாகராயர் நகர் மேற்கு பகுதி துணை செயலாளர் திருமதி சாந்தி பங்காரு புதுமனை புகுவிழா, அலுவலக திறப்பு விழா இன்று (09.07.2023) நடைபெறுகிறது.

இவ்விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயநகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி., சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக, மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கலந்துகொள்கின்றனர்.

132 'அ' வட்ட துணை செயலாளர் ப.கண்ணன் மற்றும் லயன் க.இன்பத்தமிழ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கருப்பு சிவப்பு - திராவிடப்படை!

தேர்தலுக்கு முன்பே கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார் "நாம் வெற்றி பெறுவதற்கு போராட வேண்டும். அப்படி வெற்றி பெற்று விட்டாலும் நம்மை நிம்மதியாக ஆட்சி செய்யவே விட மாட்டார்கள்" அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

சாதி வெறியர்கள், மதவெறியர்கள், மடாதிபதிகள், போலி சாமியார்கள், விலைபோன ஊடகங்கள், வலதுசாரி இனவாத கூட்டம், ஈழ வியாபாரிகள், போலி தமிழ் தேசியர்கள், சவுக்கு போன்ற கூலிக்கு மாரடிக்கும் உதிரிகள், பெரியாரை ஏற்றுக்கொண்டு திராவிடத்தை எதிர்க்கும் திரிபுவாத கும்பல், தி.மு.க. ஒவ்வாமை நோய்க்கண்ட சில உணர்வாளர்கள், ஒன்றிய அதிகார வன்முறை, பல்வேறு பெயர்களில் மறைமுகமாக இயங்கும் சனாதன கும்பல், வெறி பிடித்து அலையும் இந்துத்வா கூட்டம், ஒன்றியத்தின் காட்டு தர்பாருக்கு விலை போன அடிமை எதிர்க்கட்சி, அரசு இயந்திரத்தில் பதுங்கிக் கொண்டிருக்கிற சங்கி மனநிலை கொண்ட அதிகாரிகள், திருட்டு நடுநிலை நக்கிகள், புரட்டுக் கட்சிகள், வறட்டு ஆளுநர், சமூக விரோதிகள், மேற்சொன்ன அத்தனை களவாணிகளையும் ஓர் புள்ளியில் இணைக்கும் பார்ப்பனீயம் அனைத்தையும் அடித்து நொறுக்கிப் போட்டு நடை போடுகிறது தி.மு.க.வின் திராவிட மாடல் அரசு

தோழர்களே..!

உலக வரலாற்றில் இப்படியோர் போராட்டமான ஆட்சியாளர்களைக் கண்டதுண்டா?

மக்களுக்கான விடியலுக்காக தங்கள் பொழுதை போராட்டக் களத்திற்கு அர்ப்பணித்த தி.மு.க.வின் ஆட்சியில்...

பெருந்தொற்றுக்கு தன்னையே தந்த அன்பழகன் முதல் ஒன்றிய அதிகாரத்தின் கொடுங்கரங்களில் சிக்கி போராடும் செந்தில் பாலாஜி வரை மட்டுமல்ல...!

மேலும், எதுவும் நடக்கும்!

தமிழர்களுக்காக தங்கள் உயிரையும், உடைமைகளையும் இழந்தாவது உறுதியாய் நிற்பர் மானமிகுமுத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், அவர்தம் கருப்புசிவப்பு திராவிடப்படையும்

உதயசூரியன் என்பது சின்னமல்ல!

தமிழர்களின் விடுதலைக் குறியீடு!

- மு.தமிழ் மறவன்

மதுரை தெற்கு மாவட்டம் - தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் -

பேரையூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை தெற்கு மாவட்டம், தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம், பேரையூர் பேரூர்க் கழகச் செயலாளர் எம். எஸ்.எம். பாஸ்கர் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற இ. வருசைமுகமது, (143 31, புதுத் தெரு, பேரையூர் &அஞ்சல், மதுரை மாவட்டம்.) பேரையூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திருநெல்வேலி மத்திய மாவட்டம்

திருநெல்வேலி மாநகர அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல்!

வேட்புமனு தாக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரக் கழக அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலு (எ) சுப்பையா மறைவெய்திய காரணத்தால்;

திருநெல்வேலி மாநகர அவைத்தலைவர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் **தலைமைக் கழகத்தில் 2023 ஜூலை 12 (புதன்கிழமை) அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

தகுதி விவரம்

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள் - பகுதிக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனுக் கட்டண விவரம்

அவைத் தலைவர் பொறுப்பு

பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம் ரூ.5000/-

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/ - கட்டணம் செலுத்தி

தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்!

தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ.இராமலிங்கம், அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால்;

திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, **ஜூலை 12 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனு வினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

டெல்லிக்கு ஆரஞ்சு அலர்ட்!

வானிலை மையம் அறிவிப்பு!

புதுடெல்லி: ஜூலை 9-

தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் அவதிக்கு உள்ளாகினர். டெல்லியில் உள்ள சப்தர்ஜங் வானிலை மையத்தில் மதியம் 2.30 மணி வரை 98.7 மிமீ மழை பதிவாகியுள்ளது. ரிட்ஜ் மையத்தில் 111.4 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மேலும் டெல்லி மற்றும் என்சிஆர், யமுனா நகர், குருக்ஷேத்ரா, கர்னால், அசாந்த், பானிபட், கோஹானா, கன்னார், மெஹம், சோனிபட், ரோஹ்தக், கார்கோடா, பிவானி, சர்க்கி தாத்ரி, மட்டன்ஹைல், ஜஜ்ஜார், கோஸ்ஸாவின் பல இடங்களில் லேசானது முதல் மிதமானது வரை மழை தொடரும் என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. டெல்லியின் பல்வேறு பகுதிகளுக்கு நாளை ஆரஞ்சு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குழந்தை தமிழரசன்

ஜூலை 9 (2020)

மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.